தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 17, ஆங்கீரச—திருவள்ளுவர் ஆண்டு 2024

1993 மார்ச் 30, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10·00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்"

தம் பசியைப் பொறுத்துக் கொள்பவர்களைவிட பிறரின் பசியைப் போக்குபவர்களே சிறந்தவராவர்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத்தலைவர்

வினாக்கள்—விடைகள். வினா எண் 161, திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம், இருக்கையில் இல்லை.

வினா எண் 162, திரு. கா. பூ. முனுசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

162—

துவக்கப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாக பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம்.

9645—திரு கா. பூ. முனுசாமி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மைய அரசு துவக்கப் பள்ளிகளைப் போல தமிழக அரசு துவக்கப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களாக பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்களா ?

(ஆ) ஆம் எனில், வரும் கல்வியாண்டில் நியமிக்கப் படுவார்களா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1993 மார்ச் 30

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வியமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்கள் தலைமைப் பொறுப்பை ஏற்பதால் அந்தப் பள்ளிகளினுடைய கல்வியின் தரம் உயர்ந்த நிலையில் இருப்பதைப் போலவே, பள்ளிகளினுடைய நிர்வாகத் தன்மையும் உயர் நிலையில் உள்ளதை அறிய முடிகிறது. எனவே அரசு ஆரம்பப் பள்ளிகளின் கல்வித் தரமும், நிர்வாகத் திறனும் உயரக்கூடிய வகையில் பட்டதாரி ஆசிரியர்களுடைய தலைமைப் பொறுப்பில் அமைத்தால், மேலும் ஆரம்பப் பள்ளி மாணவர்கள் கல்வித் தரத்திலே உயர்வதற்குரிய வாய்ப்பு இருக்கிறது. எனவே இதை மீண்டும் அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழ்நாட்டில் 5581 நடுநிலைப் பள்ளிகள் இருக்கின்றன. அதில் 2,941 நடுநிலைப் பள்ளிகளில் பி. டி. தரத்தில் தலைமை ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். இன்னும் உள்ள 2,640 நடுநிலைப் பள்ளிகளுக்கு பி. டி. தரத்தில் தலைமை ஆசிரியர் பணியிடங்கள் வழங்க வேண்டியுள்ளது. அதற்குப் பிறகுதான் துவக்கப் பள்ளிகளைப் பற்றி நாம் யோசிக்க வேண்டியதாக இருக்கும். இப்போதுகூட துவக்கப் பள்ளியில் ஒருவர் தலைமை ஆசிரியராக வர வேண்டுமென்றால் இடைநிலை ஆசிரியராக நீண்ட நாள் பணியாற்றியதற்குப் பிறகுதான் அவர்கள் அந்தத் தலைமை ஆசிரியர் பொறுப்புக்கு வர முடியும். அவர்கள் அனுபவமும், சிறந்த திறமையும் உள்ளவர்களாகத்தான் இருப்பார்கள். ஆகவே அவர்கள் தலைமையில் தான் துவக்கப் பள்ளிகள் இன்றைய தினம் செயல்பட்டு வருகின்றன.

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைநிலை ஆசிரியர்கள் நீண்ட ஆண்டுகள் பணி செய்து, உயர் நிலைக்கு வருகின்ற போது உண்மையிலேயே அவர்கள் அனுபவத்தின் அடிப்படையில் பள்ளியை நிர்வகிக்க முடிவதில்லை. 'ஜாப் டைர்ட்' என்று சொல்லுவார்களே, அதற்கிணங்க, ஏதோ நமக்குப் பதவி உயர்வு கிடைத்து விட்டது இது போதும் என்ற நிலையில்

1993 மார்ச் 30]

அவர்கள் இருந்து விடுகிறார்கள். எனவே அதைத் தவிர்க்கும் முகத்தான், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சொன்னதற்கிணங்க பெண் பட்டதாரி ஆசிரியர்களை நேரடியாகவே தலைமை ஆசிரியர்களாக நியமித்தால் பள்ளிகளின் தரம் நிச்சயமாக உயரும். எனவே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இதை பரிசீலனை செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பி. டி. ஆசிரியர்களை நாம் நியமிக்கின்றபோது உயர்ந்த சம்பளத்தைத் தர வேண்டியிருக்கிறது. அதோடு கூட இடைநிலை ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு என்பது இல்லாமலே போய்விடும். ஆகவே அவர்களுக்கும் பதவி உயர்வு தர வேண்டியிருக்கிறது. பதவி உயர்வு இல்லாமல் ஒரே நிலையில் அவர்கள் பணியாற்றிக் கொண்டிருப்பார்களேயானால், அவர்களுக்கு அப்போது தான் பணியிலே ஒரு விரக்தி ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படும். எனவே இடைநிலை ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு வாய்ப்புகள் தர வேண்டுமென்றால் அதற்கு இப்போது இருப்பது இந்தத் துவக்கப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்கள்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜெ. பாலகங்காதரன்.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது துவக்கப் பள்ளிகளுக்கு இருக்கும் பாடத் திட்டங்கள் சுமார் 10 ஆண்டுகள் கழித்துப் பார்க்கும் போது மாறி, நவீனப் பாடத் திட்டங்களாக இருக்கும். அப்படிப்பட்ட சூழ்நிலையிலே கஷ்டம் ஏற்படும். இப்போது துவக்கப் பள்ளிகளில் இருக்கும் தலைமை ஆசிரியர்கள் 10 வகுப்பு அல்லது ஹையர் செகண்டரி மட்டும் முடித்து விட்டு, ஆசிரியர் பயிற்சி முடித்து விட்டு வருகிறார்கள். அந்தச் சூழ்நிலையில் எதிர்காலத்தில் அந்தப் படிப்பு போதாது என்ற சூழ்நிலை உருவாகிவிடும். எனவே பட்டதாரி ஆசிரியர்களை இப்போதே துவக்கப் பள்ளித் தலைமை ஆசிரியர்களாக நியமிக்க அரசிடம் கருத்துரு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10.05

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஒரு ஆசிரியராக இருந்தாலும் 10 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த பாடத் திட்டங்களைப் படித்தவராகத்தான் இருக்க முடியும். ஆகவே இடைநிலை ஆசிரியர்களுக்குச் சொல்லப்படுகின்ற காரணம் பி.டி. ஆசிரியர்

[1993 மார்ச் 30

களுக்கும் பொருந்தும். என்றாலும் கல்வித் துறையைப் பொறுத்தவரையில் எந்த ஆசிரியராக இருந்தாலும் பத்தாண்டுக் காலம் வரைக்கும் அவர்களுக்கு எந்தவித பயிற்சியும் இல்லாமல் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் நாம் பணியிடைப் பயிற்சியைத் தந்து வருகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. என்.ஆர். சிவபதி

திரு. என்.ஆர். சிவபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அதிக அளவில் ஆசிரியர்கள் பயிற்சி பெற்றவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அதே நேரத்தில், இப்போது துவக்கப் பள்ளிகளில் கான்ட்ராக்ட் அதாவது ஒப்பந்த அடிப்படையில் ஆசிரியர்களை நியமித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பணி நிரந்தரம் செய்ய பலவித உத்திகளைக் கையாளுகிற இந்த நேரத்தில், உண்மையிலேயே படித்து வேலையில்லாத பட்டதாரி ஆசிரியர்களைத் தலைமை ஆசிரியர்களாக நியமித்தால் கல்வித்தரம் உயரும், வேலையில்லாத் திண்டாட்டமும் போக்கப்படும் என்பதை மனதில் கொண்டு, பட்டதாரி ஆசிரியர்களைத் துவக்க பள்ளிகளில் தலைமையாசிரியர்களாக நியமிக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, இடைநிலை பயிற்சி பெற்றவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள், அவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்பது போன்ற கருத்துக்களைச் சொல்லிவிட்டு, அவர்களே கடைசியில் சொல்லும் போது, பி.டி. ஆசிரியர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க அவர்களுக்கு தலைமையாசிரியர் பணியிடம் கொடுக்கப்படுமா என்றும் கேட்டார்கள். கேள்வியிலேயே முரண்பாடு இருக்கிறது என்பதை நான் சுட்டிககாட்டுகின்ற அதே நேரத்தில், வேலையில்லாத் திண்டாட்டம் என்பது ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களுக்கும் உண்டு, பி.டி. ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களுக்கும் உண்டு, பயிற்சி பெறாமலேயே இருப்பவர்களுக்கும் உண்டு. ஆனால் பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு கொஞ்சம் அதிகமாக இருக்கிறது. அந்த நிலையில் அதை நாம் குறையாக எடுத்துக் கொள்ளக் கூடாது. பி.டி. ஆசிரியர்களை துவக்கப் பள்ளிகளில் போடுவது என்பது உயர்ந்த தகுதி படைத்தவர்களை நாம் கீழே இருக்கின்ற பள்ளிகளுக்கு எல்லாம் போட வேண்டும் என்று சொல்வது கல்விக் கொள்கை என்ற முறையில் வரவேற்கப்பட வேண்டிய ஒன்றுதான். ஆனால் வேறு பல சூழ்நிலைகளை வைத்துப் பார்க்கிறபோது, நிதி நிலையை வைத்துப் பார்க்கிறபோதும், இந்தக் கருத்து இன்றைய நிலையில் ஏற்றுக் கொள்ளப்பட முடியாது.

1993 மார்ச் 30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 163. திரு. கே. செல்வராஜ் இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) திரு. கே.பி. ராஜு கேட்கிறார். மாண்மிகு கல்வியமைச்சர்.

163—

நீலகிரி மாவட்டத்தில் பொறியியல் கல்லூரி அமைத்தல்.

*11142—திரு. கே. செல்வராஜ் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு சார்பில் நீலகிரி மாவட்டத்தில் பொறியியல் கல்லூரி அமைக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. பி. ராஜு : பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் அரசு பொறியியல் கல்லூரி அமைக்கும் உத்தேசம் இல்லையென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நீலகிரி மாவட்டம் எங்களுடைய கோவை மாவட்டத்திற்கு அருகாமையில் உள்ள மாவட்டம். அங்கே இருக்கின்ற மாணவர்கள் அத்தனை பேரும் கோவையில் இருக்கின்ற கல்லூரிகளில் தான் வந்து படிக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். நீலகிரி மாவட்டத்தில் மலைவாழ் மக்களும் பின்தங்கிய மக்களும் அதிகமாக வாழ்கிற காரணத்தால், சிறப்புத் தன்மையில் இந்த ஆண்டு அந்தப் பகுதியில் பொறியியல் கல்லூரியை ஏற்படுத்தினால் அங்கே வாழ்கிற நீலகிரி மாவட்ட மக்களுக்கு நன்மையாகவும் இருக்கும். எங்களுக்கும் சற்று சுமை குறையும் என்பதை கருத்தில் கொண்டு, இந்த ஆண்டில் அதை அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு சார்பில் எந்தவிதமான பொறியியல் கல்லூரியும் அமைக்கின்ற கருத்துரு இல்லை. பொறியியல் கல்லூரி மட்டுமல்ல, எந்த ஒரு கல்லூரியும் அமைக்கின்ற கருத்துரு இல்லை.